**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 123/2021 செல்வக்குமார் (வாசா1) தேதி:09.12.2024</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

07.05.2020 தேதியில் இறந்துபோன எனது தந்தை முருகேசபாண்டியன் இறந்துபோன மாரிமுத்து என்பருக்கு ரூ.5 லட்சம் கடனாக கொடுத்தார். அந்த தொகை கடம்பூரில் உள்ள எங்கள் வீட்டில் வைத்து எனது தந்தை மேற்படி மாரிமுத்துவிற்கு அந்த தொகையை கொடுத்தார். அந்த மாரிமுத்து என்பவர் எனது தந்தையின் நீண்டநாள் நண்பர் என்ற அடிப்படையில் அந்த தொகை கொடுக்கப்பட்டது. அந்த மாரிமுத்து நிலம் வாங்குவதற்கும், குடும்பசெலவிற்காகவும் எனது தந்தையிடம் அந்த தொகையை கடனாக வாங்கினார். அந்த மாரிமுத்து அரசு ஒப்பந்ததாரராகவும், நிலபுரோக்கராகவும் வேலை பார்த்து வந்தார். மாரிமுத்து உயிருடன் இருக்கும்போது எனது தந்தை அறிவிப்பு ஏதாவது அனுப்பினாரா என்றால் இல்லை.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>** பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.